**OS 150/2021, நாள் 13.12.2022, வாசா1 கோவிந்தராஜ் மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

4ம் பிரதிவாதி என்னுடன் பிறந்த இளைய சகோதரி என்றால் சரிதான். இறந்துபோன சேகரின் தாயார்தான் 4ம் பிரதிவாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் இறந்துபோன சேகரின் மனைவி, மகள் மற்றும் மகன். சேகருக்கும் பரிமளாவிற்கும் 2001 ம் ஆண்டு திருமணமானது. சேகருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் திருமணம் ஆவதற்கு முன்பு சேகரின் தந்தைக்கோ, தாயாருக்கோ வேறு அசையா சொத்துக்களோ இல்லை. தற்போது 1ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் மனையிடம் மட்டும் சேகர் அவரது திருமணத்திற்கு முன்பு வாங்கியிருக்கிறார். அவ்வாறு திருமணத்திற்கு முன்பு வாங்கிய காலி இடம் திருநகரிலுள்ள மனை எண்கள் 3 மற்றும் 4 என்கிறேனா என்றால் ஆமாம். அந்த இடத்தில் தற்போது ஒரு பகுதியில் 1 முதல் 3 பிரதிவாதிகள் வசிக்கும் குடியிருப்பு வீடும் மற்றொரு மனையிடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. அடுக்குமாடி குடியிருப்பில் வசித்துவரும் வாடகைதாரரிடமிருந்து வாடகையை நான் வசூலித்து வருவதாக வழக்குரையிலும் முதல்விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன். பிரதிவாதிகள் குடியிருக்கும் வீடு 2005 ல் கட்டப்பட்டது. அடுக்குமாடி குடியிருப்பு 2015 ல் கட்டப்பட்டது. சேகர் வெளிநாட்டில் டிரைவராக வேலைபார்த்தார். 1ம் பிரதிவாதியும் சேகரும் 2017 ம் ஆண்டு வரை ஒன்றாகத்தான் இருந்தனர். 2017 ம் ஆண்டிற்குப்பிறகுதான் அவர்களுக்குபிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். நான் கடன் கொடுப்பதற்கு முன்பு அடுக்குமாடி குடியிருப்பிற்கான வாடகையை 1ம் பிரதிவாதிதான் வாங்கிவந்தார் என்றால் சரிதான். அந்த வாடகையை வைத்து 1ம் பிரதிவாதி வெளிக்கடன்களை அடைத்து வந்தார் என்றால் சரிதான். சேகருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதும் ஒருவர் மீது ஒருவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து பிரச்சனை ஏற்பட்டது என்றால் 1ம் பிரதிவாதிதான் சேகர் மீது புகார் கொடுத்தார். 1ம் பிரதிவாதி சேகர் அவரது அப்பா, அம்மா, சேகரின்

தம்பி மனைவி கலைவாணி மற்றும் என்மீது அய்யம்பேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். மகளிர் காவல்நிலையத்திலும் புகார் கொடுத்தார். அதன்பிறகு 1ம் பிரதிவாதி நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம் தஞ்சாவூர், சேகர் அவரது அப்பா, அம்மா, சேகரின் தம்பி மனைவி கலைவாணி மற்றும் என்மீதும் குடும்ப வன்முறை வழக்கு எண் 4/2018 தாக்கல் செய்து இன்றுவரை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் சேகர் தாக்கல் செய்த எதிருரையை நானும் சேகரின் பெற்றோரும் ஏற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். 2019 ஆம் ஆண்டில் தாக்கல் செய்த அந்த எதிருரையில் பக்கம் 4 ல் பாரா 19ல் இறந்துபோன சேகர் அய்யம்பேட்டையில் உள்ள வீடுகளில் குடியிருந்த நபர்களிடமிருந்த கடந்த 3 மாத காலமாக வாடகை வசூல் செய்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். DVC வழக்கில் சேகருக்கு கடன் கொடுத்த விவரத்தை இன்றுவரை நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) A. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.